**செய்தி வெளியீடு எண்: 027** **நாள்: 05.01.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>ஒன்றே பாரதம் ஒப்பிலா பாரதம் (Ek Bharat Shreshtha Bharat)</u>

சுதந்திர போராட்ட தியாகியும், இந்தியாவின் இரும்பு மனிதர் எனப் போற்றப்படும் பாரத ரத்னா சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் 140வது பிறந்த ஆண்டினை முன்னிட்டு நமது பாரதப் பிரதமர் அவர்களால் 31.10.2016 அன்று **"ஒன்றே பாரதம் ஒப்பிலா பாரதம்"** (Ek Bharat Shreshtha Bharat) என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமாவது, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி, மொழி, வர்த்தகம், கலாச்சாரம், பாரம்பரியம், சுற்றுலா ஆகியவற்றினை அறிந்து கொள்ளவும், மாநிலங்களுக்கிடையே நல்லுணர்வு மற்றும் ஒற்றுமையினை மேம்படுத்திட ஏதுவாக ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாநிலமும் பிற மாநிலத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களான தமிழ்நாடு மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களை பரிவர்த்தனை செய்தல், பாரம்பரிய நாட்டுப்புற இசை மற்றும் நாட்டுப்புற நடனக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், பல்கலைக் கழகங்களுக்கிடையே கலாச்சாரப் பரிமாற்றம் மேற்கொள்ளுதல், பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே கட்டுரைப்போட்டிகள் மற்றும் வினாடிவினா போட்டிகள் நடத்துதல், உணவுத் திருவிழா நடத்துதல், மாநிலத்தின் திருவிழாக்களில் பங்குகொள்ளச்செய்தல், விழாக் காலங்களில் திருக்கோவில்களுக்கு அழைத்துச் செல்லுதல், வேளாண்மைத் தொடர்பான விவரங்களை பரிவர்த்தனை செய்துகொள்ளுதல் போன்ற பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாகும்.

அதன் அடிப்படையில் 2017–2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர் மாநிலத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பபட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக ஜம்மு காஷ்மீர் மாநிலமும் தமிழ்நாடும் கலைக்குழுக்களை இரு மாநிலங்களுக்கிடையே பரிவர்த்தனை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமையினைக் காணவும் பல ஆண்டுகளாக கலாச்சாரத்தால் ஒன்றுபட்டுள்ள இந்தியத் திருநாட்டில் தேசிய ஒருமைப்பாட்டினை மாநிலங்களுக்கிடையே போற்றிப் பேணவும் வாய்ப்பாக அமைகிறது. மேலும்

இரு மாநிலங்களுக்கிடையேயான இக்கலாச்சார பரிவர்த்தனை மூலம் இரு மாநிலங்களின் மக்களும் தங்களது தொன்மையான கலாச்சாரத்தை கலை நிகழ்ச்சிகள் வாயிலாக இரு மாநிலத்து மக்களிடையே கொண்டுசேர்க்க ஒரு வாய்ப்பாக அமைகிறது. **"ஒன்றே பாரதம் ஒப்பிலா பாரதம்"** என்ற திட்டத்திற்கான ஒருங்கிணைப்பு அமைச்சகமாக, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் (உயர்கல்வித் துறை) செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான தமிழக அரசின் ஒருங்கிணைப்பு அலுவலராக தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மத்திய அரசின் **"ஒன்றே பாரதம் ஒப்பிலா பாரதம்"** என்ற திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களுக்கிடையே உள்ள கலாச்சார ஒற்றுமையை மேம்படுத்திடும் விதமாக ஜம்மு காஷ்மீர் மாநில பாரம்பரிய கலைக்குழுவினர் பங்குபெறும் கலை நிகழ்ச்சிகள் வரும் **7.1.2018** (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை **5.30** மணி முதல் இரவு **7.30** மணி வரை மாமல்லபுரத்தில் தற்போது நடைபெற்றுவரும் நாட்டிய விழாவில் நடைபெறவுள்ளது. கலை பண்பாட்டுத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கலை நிகழ்ச்சியில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பாரம்பரிய கலை வடிவங்களான டோக்ரி நடனம், காஷ்மீரி நடனம், லடாக்கி நடனம், தாம்பாலி நடனம், பாக் நாக்மா, பஉறாரி நடனம், கோஜ்ரி நடனம், அரன், கீத்ரு, சஜ்ஜா உள்ளிட்ட நடனக் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்படவுள்ளன. எனவே **7.1.2018** அன்று மாலை மாமல்லபுரம் நாட்டிய விழாவில் நடைபெறும் ஜம்மு காஷ்மீர் மாநிலக் கலைக் குழுவினர் பங்குகொள்ளும் நடனக் கலை நிகழ்ச்சிகளை கலை ஆர்வலர்களும் மற்றும் பொது மக்களும் கண்டுகளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இக் கலை நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீர் மாநில கலைக் குழுவினர் **9.1.2018** அன்று மாலை தஞ்சை பெரிய கோவிலிலும், **10.1.2018** அன்று மாலை மதுரை காந்தி அருங்காட்சியகத்திலும் கலை நிகழ்ச்சிகள் வழங்கவுள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**